From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 32/2019

Deposition of witness for: PW -

| | | | |
|---|---|---|---|
| Name | : | Father/Husband Name | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 29.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 2025.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது கீழவளவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் மதிவாணன் என்பவருடன் பணிபுரிந்த வகையில் அவரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும், எனவே வழக்கு கோப்பை பார்த்து அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 01.04.15ம் தேதி 14 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. மதிவாணன் அவர்கள் நிலைய பொறுப்பிலிருந்தபோது இந்திரா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 247/18 இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **( அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் மேலூர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு. கோபிநாத் அவர்களின் பார்வைக்க வைத்துள்ளார். சார்பு ஆய்வாளர் அவர்கள் பின்னர் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் மலைச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **( அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** பின்னர் சம்பவ சாட்சிகளான இந்திரா, பெரியகருப்பன், காந்திமதி, மாலா, பாண்டி, சந்திரன் மற்றும் மலைச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பினனர் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.குமார் என்பவரை விசாரித்து

சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் 02.04.15-ம் தேதி காலை 09 மணிக்கு ஒத்தக்கடை பஸ் நிலையத்தில் வைத்து எதிரி சேகர் மற்றும் திருப்பதி ஆகியோர்களை காரணம்கூறி கைது செய்து தக்க வழக்காவல்மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். மற்ற எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள்மீது 25.09.18ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:**